REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 24உ சனி (9—11—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 25உ ஞாயிறு (10—11—57) [இதழ் 127

தரிசாகக் கிடக்கும் நிலம்

கோவையில் 40,319 ஏக்கர் பாழாகிறது!

சென்னை, நவ. 8—

"சென்னை மாநிலத்தில் கோவை மாவட்டத்தில் மட்டும் 40,319 ஏக்கர் நிலம் பயிரிடப்படாமல் உள்ளது" என்று, கவலையுடன் கணக்கெடுத்து அமைச்சர் பக்தவத்சலம் கேள்வி நேரத்தின்போது இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

'சட்டசபை மயக்கத்தில் மக்களை மறந்துவிடமாட்டோம்'

'கொள்கைக்கு முரண்படாமல் சட்ட மன்றத்தில் பணியாற்றுவோம்'

'கட்டிடத்துக்கு வெடிவைப்பதோ, ஊரைக் கொளுத்துவதோ புரட்சியல்ல'

'எண்ணப் புரட்சி'தான் நிரந்தரப் புரட்சியாகும்'

'சட்டமன்றத்தில் பணியாற்ற மக்களும் தக்க கருத்துரை தந்துதவ வேண்டும்'

கோமளீஸ்வரன்பேட்டையில் அண்ணு கொள்கை விளக்கம்

சென்னை, நவ. 9—

நேற்று மாலை, சென்னை—கோமளீஸ்வரன்பேட்டையில் நடைபெற்ற மறுமலர்ச்சி மன்றத் துவக்கவிழாப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அண்ணு அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள்பால் என்றும் கொண்டுள்ள அக்கறை குறித்தும், சட்டமன்றத்தில் அது ஆற்றிவரும் பணிகுறித்தும் விளக்கினுர்; அதன் விவரம் இங்கு தரப்படுகிறது :—

"நீண்ட நாளாக இந்த வட்டாரத்துக்கு வரவேண்டுமென்று தோழர்கள் அழைத்தும், எனக்கு இப்பொழுதுதான் வாய்ப்பு ஏற்பட்டது. கூட்டங்களுக்குத் தேதி கொடுப்பதிலேகூட எனக்குக் கொஞ்சம் தயக்கம்; ஏனென்ருல், நித்தம் நித்தம் நம் கூட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இங்கேகூட தோழர் ஒருவர், இனி நடக்க இருக்கும் கூட்டங்களின் அட்டவணையைப் படித்து உங்களுக்கு அறிவித்தார். இப்படிக் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்களும் உற்சாகத்துடன் கலந்துகொள்கிருேம்; நீங்களும் ஆர்வத்துடன் கலந்துகொள்கிறீர்கள்.

"ஒவ்வொரு நாளும் எனக்குக் கொஞ்சம் தயக்கம்தான்—'நேற்றுதானே ஒரு கூட்டத்தில் பேசினேம்; அதற்குள், இன்று என்ன புதிதாக ஒன்றைப் பேசுவது'—என்று எண்ணுவேன். அதே நேரத்தில், மக்கள், 'நேற்று இருந்த கூட்டம் இன்று இருக்காது' என்று எண்ணிக்கொண்டு, மேலும் மேலும்—மறுபடியும் மறுபடியும் பல்லாயிரக்கணக்கில் வந்து கலந்துகொள்கின்றனர். இப்படிக் கூடுவது நல்ல ஆர்வத்தை எடுத்துக்காட்டுகிறது; இது, தி. மு. கழகத்துக்கு அந்த அளவு வலுவூட்டப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவதுடன், அன்ருட உலக நிலைமைகளைப் பற்றி மக்கள் தெரிந்துகொள்ளவும் பயன்படுகிறது.

"இன்று தி. மு. கழகத்தைப் பற்றி கேட்கவும், சிந்திக்கவும் ஆசைப்படுகிருர்கள்; இதற்குக் காரணம் நாட்டில் ஏற்பட்டுள்ள 'புரட்சி'தான். 'புரட்சி' என்ருல், கட்டிடத்துக்கு வெடிவைப்பது—ஊரைக் கொளுத்துவது அல்ல; 'எண்ணப் புரட்சி'தான் நிரந்தரப் புரட்சியாகும்; அந்த எண்ணப் புரட்சிதான் நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கிறது.

"சட்ட மன்றத்திலே கோவில், மடாலயச் சொத்துக்களெல்லாம் மக்களுக்கு நல்ல விதத்திலே—கல்வி போன்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படவேண்டும் என்று இன்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசினுர்கள் என்று, தோழர் வ. கோவிந்தசாமி இங்கு பேசுகையில் குறிப்பிட்டார். அப்படிப் பேசியதற்கு அவர்கள் உள்ளத்தில் மனப் புரட்சி ஏற்பட்டுள்ளதே காரணமாகும்.

"நித்தம் நித்தம் நீங்கள் இப்படிக் கூடுகிறீர்கள்; நாளுக்கு நாள் ஏராளமாக — பல்லாயிரக்கணக்கில் கூடுகிறீர்கள்; இது, தி. மு. கழக வளர்ச்சிக்கு மட்டுமல்ல—நாட்டில் தெளிவு ஏற்படவும் உதவுகிறது.

"தி. மு. கழகம் சென்ற ஆண்டு இருந்த நிலைக்கும், இந்த ஆண்டு இருக்கும் நிலைக்கும் இடையிலே மாறுபாடு ஏற்பட்டிருப்பதை இன்று நீங்கள் காணுகிறீர்கள். சென்ற ஆண்டு, வெட்டவெளியிலே—சந்தைச் சதுக்கத்திலே — அங்காடிக்கடை அருகிலே நாம் கூட்டம் போட்டுப் பேசினேம்; ஏராளமான மக்களும் கூடினுர்கள்.

"இந்த ஆண்டும் அப்படிக் கூட்டங்கள் போடுகிருேம்; இன்னும் அதிகமான மக்களைச் சந்திக்கிருேம்; அதோடு, எங்கு நாம் இடம் பெருமல்—பெறமுடியாமல் இருந்தோமோ அங்கு—அந்த இடத்தில்—சட்டமன்றத்தில் இடம் பெற்றிருக்கிருேம். சட்டமன்றத்தில் நாங்கள் முறைதவருமல்—ஒன்றையும் விட்டுவிடாமல் எடுத்துச் சொல்லி, நல்ல காரியங்களைச் சாதிக்க முயற்சி எடுத்து வருகிருேம்.

"காரியங்களைச் சாதித்து வருகிருேம்—நிறைவேற்றுகிருேம் என்று சொல்லவில்லை; சாதிக்க முயற்சிகள் எடுத்துவருகிருேம் என்றுதான் சொல்கிறேன். இப்படி நான் சொல்வதற்குக் காரணம், காரியம் சாதிக்கும் அளவுக்கு நீங்கள் எங்களை அனுப்பி வைக்கவில்லை—முயற்சி எடுக்கும் அளவுக்குத்தான் அனுப்பியிருக்கிறீர்கள்.

"சட்டசபைக்குச் சென்றதால் நம்முடைய எந்தக்கொள்கைக்கும் முரண்பாடானவகையில் நடந்துவிடவில்லை; நம் கொள்கைக்கு வலுவளிக்கக்கூடிய வகையில் தான் தி. மு. கழகம் சட்டசபையிலும் பணியாற்றிவருகிறது.

"பொதுமக்களுக்கும் சட்டமன்றத்துக்குமிடையே ஒரு தொடர்பு தேவை. அதற்குத்தான் இத்தகைய கூட்டங்கள் பயன்படுகின்றன.

"உங்களை, ஒரு 5 நிமிட நேரம் சர்க்கஸ் கம்பெனிக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன்; மனக்கண்ணுல் சர்க்கஸ் கம்பெனியைப் பாருங்கள்—அங்குள்ள பயில்வான் ஒருவன், தான் கற்ற அரிய வித்தையைக் காட்டுகிருன்; கம்பியில் நடக்கிருன்; இந்தக் கம்பியிலிருந்து அந்தக் கோடியிலுள்ள கம்பிக்குத் தாவுகிருன்; தாவுகிற நேரத்தில் எதிரில் ஒருவன் வருகிருன்; அவன் கையையும் பிடித்துக்கொண்டு தாவுகிருன்; இன்னெரு நேரத்தில் அவன், தன் கையில் 50—60 கோப்பைகளை அடுக்கிக்கொண்டு இருக்கிருன்.

"சர்க்கஸ் கம்பெனியில் உள்ள பயில்வான், தன் வீட்டுக்கு வந்தால் சர்க்கசில் நடந்ததைப்போல சுட்டுவிரலில் 50 கோப்பைகளை அடுக்கிக்கொண்டு ஆடமாட்டான்; வீட்டு முறைப்படியே நடப்பான்.

"சட்டசபையில், தி. மு. க. தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. சட்டசபையிலும், பொதுமக்கள் மன்றத்திலும் எப்போதும் செய்யவேண்டிய காரியங்களை ஒன்றுவிடாமல் செய்து வருகிருேம்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சட்டமன்றத்திற்குப் போனுல் மக்களை மறந்துவிடுவார்கள் என்று, தேர்தல் காலத்திலே சிலர் பேசினுர்கள்—மந்திரிகளும், மாற்றுக் கட்சிக்காரர்களும் கூறினுர்கள்.

"அப்படிப்பட்ட இடம்தான் சட்டசபை—மயக்கம் தரக்கூடியதுதான். குளுகுளு என்று வீசும் காற்றும், மிருதுவான நாற்காலியும் இருக்கக்கூடிய அந்த சட்டசபை மயக்கம் தரக்கூடியதுதான்.

"இருந்தாலும், 'நான் மக்களை மறந்துவிடமாட்டேன்' என்று, தேர்தல் காலத்திலே வாக்களித்திருந்தேன்; அதன்படி நாங்கள் என்றும் மக்கள் மன்றத்தை மறந்துவிடவில்லை — மறக்கமாட்டோம் என்று கூறிக்கொள்கிறேன்.

"'தில்லை வெளியிலே கலந்துவிட்டால் திரும்பி வருவாரோ' — என்று நந்தனுர் சரித்திரத்திலே சொல்லுவதுண்டு; தில்லைக்குச் செல்வதாகக் கூறிய நந்தனுரைப் பார்த்து அப்படி பக்தர்கள் சொல்லியதாகப் புராணம். பக்தர்கள்தான் செய்தார்களோ, எந்த எத்தர்கள்தான் செய்தார்களோ — அது உண்மையோ பொய்யோ, எனக்குத் தெரியாது; தில்லைக்குப்போன நந்தனுர் திரும்பி வரவில்லை.

"அதைப்போல, 'சட்டமன்றத்துக்குப் போனுல் பிறகு சந்தி—சதுக்கத்துக்கு அண்ணுத்துரை வரமாட்டான்' என்று சிலர் சொன்னுர்கள்; அப்படித்தான் அவர்கள் விரும்பினுர்கள்—எண்ணினுர்கள்.

"ஆனுல், சட்டமன்றத்தின் பொறுப்புகளையும் நிறைவேற்ற தி. மு. கழகம் முயற்சி செய்து வருகிறது; அதே நேரத்தில், மக்களைப் பற்றியும் கவலையெடுத்துக் கொண்டு இருக்கிறது; இந்த இரண்டுக்கும் ஆற்றல் நிறைய வேண்டும்; இதற்குத்தான் நீங்களனைவரும் தி. மு. கழகத்துக்கு ஆதரவுதரவேண்டும்என்றுநண்பர் அன்பழகன்பேசுகையில்வேண்டிக்கொண்டார். நீங்கள் ஆதரிப்பது என்பது ஓட்டளிப்பது மட்டுமல்ல; சட்டசபையிலே நாங்கள் எப்படியெப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களோ, எங்களை எப்படியெப்படி நடக்கச் சொல்லுகிறீர்களோ, அவற்றைப்பற்றியெல்லாம் நீங்கள் எங்களிடம் வந்து பேசலாம்; யோசனை சொல்லலாம்—சொல்லவேண்டும்.

"நாங்கள் சட்டசபையில் எப்படி நடக்க வேண்டும் என்று நடப்பதற்கு முன்னும், எப்படி நடந்திருக்கக்கூடாது என்று நடந்ததற்குப் பின்னும் வந்து சொல்லி, இந்த இரண்டு வழிகளிலும்—அதாவது, நடப்பதற்கு முன்னும் பின்னும் எங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லி—உதவலாம்; குறைகளை மூடிமறைப்பது கூடாது. உடனே அதைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். சட்ட மன்றத்திலே நாங்கள் பேசுவதற்கான பிரச்சினைகளுக்குத் தகுந்த தகவல்களைச் சேகரித்துத் தருவதற்கு அந்தந்த வட்டத்திலுள்ள வாலிபர்கள் முயற்சி செய்யலாம்.

"கடந்த 4, 5 தினங்களாக மழை; இதன் விளைவாக எந்தெந்த வட்டாரத்தில் எவ்வளவு பேர் அல்லற்படுகிருர்கள் — குடிசையிழந்து உட்கார இடமின்றித் தவிக்கிருர்கள் என்னும் தகவலை அந்தந்த வட்டார தி. மு. கழகத் தோழர்கள் திரட்டித்தரலாம்; இதைத் தருவது உங்கள் கடமை; அதைச் சட்ட மன்றத்திலே பேசுவது எங்கள் பொறுப்பு; அப்படிச் செய்யாமல்—எவ்விதத் தகவலும் சேகரித்துத்தர முயலாமல் சட்டசபையிலே நமது உறுப்பினர்கள் இன்ன பிரச்சினையைப் பற்றி என்ன பேசினுர்கள் என்று பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால் அதிலே ஒன்றும் காண முடியாது."

இந்தி எதிர்ப்பில் மாணவர் அணி

கோவைக் கல்லூரி மாணவர்கள் 1,000 பேர் ஆர்ப்பாட்டம்

கோவை, நவ. 9—

தமிழ் நாட்டில் இந்தித் திணிப்பை எதிர்த்து, கோவையிலுள்ள அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள் சுமார் 1,000 பேர் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அவர்கள் அனைவரும் அணி வகுத்து, 'இந்தித் திணிப்பு ஒழிக; தமிழ் வாழ்க' என்று முழங்கிக்கொண்டு நகரின் முக்கியத் தெருக்கள் வழியாகச் சென்றனர். பெருவாரியான மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லவில்லை.

கல்வி நிரந்தரக் குழு அமைப்பு

க. அன்பழகன் கோரிக்கையை அமைச்சர் ஏற்ருர்

சென்னை, நவ. 8—

"கல்வி சம்பந்தமாக ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அவ்வப்போது முடிவுகளைக்கூற, ஒரு நிரந்தரக் குழுவை ஏற்படுத்த வேண்டும்"

என்று, தோழர் க. அன்பழகன் தெரிவித்த கருத்தை, கல்வி அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ்
சென்னை 9—11—57 சனி

என்ன நியாயம்?

உயர்நிலைப் பள்ளிக் கட்டத்தில் தாய் மொழி, இந்தி அல்லது வேறு ஏதாவது ஒரு 'இந்திய மொழி', மற்றும் ஆங்கிலம் அல்லது வேறு ஏதாவது ஒரு இந்திய மொழி அல்லாத மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்ற சட்டசபைக் குழுவின் சிபாரிசு பற்றி நேற்று எழுதியிருந்தோம்.

உயர்நிலைப் பள்ளிக் கட்டத்தில் மூன்று மொழி பயில வேண்டுமென்ற இந்த ஏற்பாடு, அந்தக் கட்டத்தோடு கல்விப் பயிற்சியை நிறுத்திவிடுகிறவர்களுக்கு எந்தவிதப் பலனையும் தர முடியாது என்பது தெளிவு. உருவான பலன் தரக்கூடியது என்பதை இதுவரை யாரும் சுட்டிக்காட்டவில்லை.

இந்த ஏற்பாட்டினால் பலன் இல்லாதது மட்டுமல்ல, நஷ்டமும் ஏற்படுகிறது என்பதை நம்மால் சுட்டிக்காட்ட முடியும்.

எவ்வாறெனில், இப்போது மாணவர்கள் தாய் மொழி, மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளைத்தான் கற்றுவருகின்றனர். இவர்களில், உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்புடன் அதாவது எஸ். எஸ். எல். சி பரீட்சையுடன் படிப்பை நிறுத்திவிடுகிறவர்கள்தான் மிகப் பெரும்பாலானோர். மிக சொற்பமானோர்தான் — நான்கைந்து சதவிகிதத்தினர் மட்டுமே, கல்லூரிகளை எட்டிப் பார்க்க முடிகிறவர்களாக இருக்கின்றனர். இப்படி உள்ள பத்தாவது வகுப்புவரை படித்துள்ள மாணவர்களே, தங்களின் தாய் மொழிஅல்லாத மற்றொரு மொழியாக அவர்கள் கற்கும் ஆங்கிலத்தில், குறைந்தபட்ச தேர்ச்சியோ, திறனோ கூடப் பெறுவதில்லை. எஸ். எஸ். எல். சி. பரீட்சை தேறுவோரில் கணிசமான சதவிகிதத்தினர் —சராசரியானவர்கள் — ஆங்கிலத்தில், பத்து வாக்கியங்கள் பிழையற எழுதவோ பேசவோ இயலாதவர்களாயிருக்கின்றனர் கடந்தசமீப காலமாக. அதாவது, அவர்கள் பெற்றுவரும் இப்போதைய மொழிக் கல்வியிலேயே சராசரித் திறமை பெற்றிருக்கவில்லை என்பதை, வருத்தத்துடனேனும் ஒப்பித்தாகவேண்டும். இருமொழி பயிலுவதிலேயே மாணவர்கள் அத்தனை கஷ்டமடைகின்றனர் என்பதைத்தான் இந்த நிலைமை காட்டுகிறது.

அவ்வாறிருக்க, மூன்று மொழி பயிலச் சொல்லுவதால், அவர்களின் கஷ்டங்கள்தான் அதிகரிக்கும் என்பதுடன், அவர்கள் எந்த மொழியையுமே சரிவரக் கற்காமற் போகக்கூடிய ஆபத்தும் இருக்கிறது என்பதை உணரவேண்டும். இப்போது இருமொழிக் கல்வி அளிப்பதற்கு ஒதுக்கப்படும் நேரத்தில்தான் மூன்று மொழிகளையும் போதிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டியிருக்கும். அதனால், ஏற்கனவே இரு மொழிகளில் சராசரியான திறன் பெறமுடியாதிருக்கும் மாணவர்கள் மூன்று மொழிகளைக் கற்றுத் திறன்பெறுவது எங்ஙனம் என்பதையும் சிந்தித்தாக வேண்டும்.

மற்றும், பள்ளி இறுதி வகுப்புடன் படிப்பை நிறுத்திவிடுகிறவர்களும் இந்த ஜனநாயகக் காலத்தில் நல்ல குடிமக்களாக வாழவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறவர்கள்தான். அவர்கள் அப்படி நல்ல குடிமக்களாக விளங்குவதற்கும் இந்த ஏற்பாடு பெருந்தடையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எப்படி? நல்ல குடிமக்களாக விளங்குவதற்கு சிறுர்களையும், வாலிபர்களையும் தயார்படுத்துவதே கல்வியின் நோக்கமாயிருக்கவேண்டும் என்பதும், அந்தக் கல்வி, இளைஞர்களுக்கு விரிவான பொது அறிவையும், சமூக உணர்வையும், நாட்டுப் பற்றினையும், தொண்டுள்ளத்தையும் ஊட்டவேண்டும் என்பதையும் நிபுணர்கள் பலர் வற்புறுத்திவருவதை நாம் கருதிப் பார்க்கவேண்டும்.

நாளும் வளரும் விஞ்ஞானம், பூகோளம், வரலாறு, கணிதம், சமூகவியல், பொருளாதாரம், அரசியல் முதலிய துறைகளைப் பற்றிய அடிப்படையான விஷய ஞானமேனும் உயர்நிலைப் பள்ளிகள், மாணவர்களுக்கு ஊட்டியாகவேண்டும். அப்போதுதான் அவர்கள் நல்ல குடிமக்களாக வாழத் தேவையான பொது அறிவைப் பெறமுடியும். இந்தப் பொது அறிவை தேவையான அளவு, மாணவர்கள் பெறமுடியாது செய்துவிடாதா இந்த மூன்று மொழிக் கல்வித் திட்டம் என்று அஞ்சுவது தவறு? தேவைப்படுகிற பொது அறிவைப் பெற வேண்டி செலவிடவேண்டிய நேரம், நினைப்பு, உழைப்பு அத்தனையையும் மாணவர்கள், பயன்படாத ஒரு மூன்றுவது மொழி அறிவு பெறுவதற்காகச் செலவிட வேண்டும் என்பது என்ன நியாயம்?

அரசியல் தியாகிகள் யார்?

ஆந்திர சட்டசபையில் அரசியல் தியாகிகள் யார் என்பதற்கு மந்திரி ஒருவர் விளக்கம் தந்திருக்கிறார்.

தியாகிகளுக்கு நிலம் வழங்குவது பற்றிய கேள்விகளின்போது ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர், 'காங்கிரஸ்காரர்கள் மட்டும்தான் அரசியல் தியாகிகளாகக் கருதப்படுகின்றனர்?' என்று கேட்டார்.

உடனே ரெவினியூ மந்திரிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்ததாம்!

"சொந்த நாட்டிற்கு விசுவாசம் காட்டாதவர்கள், கொள்ளையடித்தவர்கள், கொலை புரிந்தவர்கள், வீடுகளுக்குத் தீ மூட்டியவர்கள் எல்லாம் அரசியல் தியாகிகளாகக் கருதப்பட முடியாது"

என்று, கலா வெங்கட்ராவ் பதிலளித்திருக்கிறார்.

"இந்தியாவின் சுதந்தரப் போராட்டத்தின்போது, தியாகம் புரிந்தவர்கள், விசுவாசமான காங்கிரஸ்காரர்கள்தான் தியாகிகளாவர்." என்றும் அவர் விளக்கம் தந்திருக்கிறார்.

செஞ்சிலுவை மாநாட்டில் குழப்பம்

பிரதிநிதிகள் வெளிநடப்பு

டில்லி, நவ. 7—

"கடைசி நேரத்தில் அமெரிக்கா தனது தீர்மானத்தை முன்மொழிந்த முறை, இந்திய செஞ்சிலுவை அமைப்பை அவமதிப்பதாகும்; எனவே நான் இந்த மண்டபத்தில் இருப்பதை விரும்பவில்லை"

என்று திருமதி ராஜ்குமாரி அமிர்தகௌரி, அறிவித்து இங்கு நடைபெற்ற செஞ்சிலுவை உலக நாடுகளின் மாநாட்டிலிருந்து வெளியேறினர்.

'பர்மோசா' பிரதிநிதியை அவையில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்றும், இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்ததும், அதனை சீனப் பிரதிநிதி மேடைக்கு வந்து கண்டித்தார்.

திருமதி அமிர்தகௌரியைத் தொடர்ந்து பல பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர்.

தொடர்ந்து மாநாடு பெல்ஜியம் பிரதிநிதி தலைமையில் நடைபெற்றது.

ஏற்றுமதி குறைந்துவிட்டதாம்!

ரிசர்வ் பாங்கி வருத்தம்

பம்பாய், நவ. 8—

அந்நியச் செலாவணியில் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையைச் சமாளிக்க இறக்குமதியைக் கட்டுப்படுத்தி— குறைத்தால் போதும் என்ற இந்தியப் பேராசின் முடிவுக்கு ரிசர்வ் பாங்கியின் அறிக்கை பல சிக்கல்களை உருவாக்கியுள்ளதாகத் தெரிகிறது.

"இந்த ஆண்டின் இரண்டாவது மூன்றுமாத காலத்தில் கூட இந்தியாவின் அந்நியச் செலாவணி நிலை திருப்திகரமாக இருக்கவில்லை. அதிக இறக்குமதியைவிட, குறைவான ஏற்றுமதியே இதற்கு காரணம்" என்று ரிசர்வ் பாங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஏற்றுமதியில் 21 சதவிகிதம் குறைந்துள்ளது என்றும் இறக்குமதியில் 6 சதவிகிதம் இந்த காலத்தில் உயர்ந்துள்ளது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்டர்லிங் நிலுவையில் 32 கோடி குறைந்துவிட்டதாம்.

இறக்குமதியின் மதிப்பு 323·1 கோடி என்றும், ஏற்றுமதி அளவு 139·8 கோடி மட்டுமே என்றும் கூறப்பட்டுள்ளது.

ரூ. 49·4 கோடி மதிப்புக்கு உணவுத் தானியங்கள் மட்டும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாம்.

சட்ட மன்றத் துணைத் தலைவர் சம்பளம்

300-ஆக இருந்தது ரூ. 750-ஆக உயர்வு

சென்னை, நவ. 7—

இப்போது சென்னை சட்ட மன்ற உதவி சபாநாயகருக்கும் மேல்சபைத்துணைத் தலைவருக்கும் திங்கள்தோறும் ரூ. 300 ஊதியம் தரப்படுகிறது; இனி அதை ரூ. 500-ஆக உயர்த்தவும் இதை தவிர, வீட்டு வாடகை, போக்குவரத்து அலவன்சாக ரூ. 250 தருவதற்கும் வகை செய்யும் மசோதா ஒன்றை நிதி அமைச்சர் சுப்பிரமணியம், சட்ட மன்றத்தில் கொண்டுவந்தார்.

மாநில உதவி மந்திரிகளுக்கு அளிக்கும் சம்பள விகிதம் இவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்கார் விரும்பியதாலேயே இவ்வாறு தருவதற்கு சென்னை சர்க்கார் தீர்மானித்தனராம்; இதனால் ஏற்படக் கூடிய அதிகச் செலவு மாதம் ரூ. 900; ஆண்டுதோறும் ரூ. 10,800 ஆணக்காகிறது.

'நாம்வடநாட்டுக்குஅடிமைப்படவே இந்தி திணிக்கப்படுகிறது'

'அதை எதிர்த்துப் போராட தமிழ் மக்கள் முன்வருதல் வேண்டும்'

'இந்தி எதிர்ப்புச் செய்திகளை பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்வானேன்?

சென்னை—புரசையில் கே. ஏ. மதியழகன் முழக்கம்

29—10—57 மாலை, சென்னை—புரசை (25-வது வட்டம்) தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"நாம் பல நாட்களாகக் கூறிவந்த கருத்தை இன்று மக்கள் நல்ல முறையில் வரவேற்க ஆரம்பித்திருக்கிறார்கள். அண்ணா அவர்களின் பேச்சை தினந்தோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கேட்டு வருகின்றனர்; நமது கொள்கையிலேயுள்ள சூட்சமத்தைப் புரிந்துகொள்ளும் காலம் வந்துவிட்டது. இதை நீங்கள் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

"நாடெங்கும் அக். 13-ந் தேதியன்று, இந்திக்கு எதிராக மக்கள் தங்கள் ஏகோபித்தஎதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டனர். நாம், 'இந்தி கூடாது—ஆகாது' என்று எவ்வளவு சொன்னாலும், இந்தித் திணிப்பை அமுல் நடத்துவது என்ற தீர்க்கமான முடிவுக்கு ஆட்சியாளர் வந்துவிட்டார்கள்.

"நாள்தோறும் பல வடிவங்களிலே இந்தி புகுத்தப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். இந்தி நமக்கு இம்மியளவும் அவசியமில்லை. டில்லியுடன் நாம் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. பெரியதொரு விடுதலைப்போராட்டத்தைத் துவங்கும் கட்டத்திலே இன்று நாம் வந்திருக்கிறோம். இதற்காகவே நாம் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வந்திருக்கிறோம். அதைத் தொடர்ந்து மேலும் பணியாற்ற இருக்கிறோம்.

"இன்று இந்தியை எதிர்க்கப் பல புதிய புதிய கருத்துக்களைப் பார்க்கிறோம். ஆச்சாரியாரே இந்தியை எதிர்ப்பார் என்று எதிர்பார்த்திருப்பீர்களா? எவ்வளவு நெஞ்சுறுதியும், மன உறுதியும் வேண்டும், அவருக்கு இதை எதிர்க்க? தாளமுத்துவை—நடராசனைக் காணிக்கையாகப்பெற்ற ஆச்சாரியார்தான் இன்று இந்தியை எதிர்க்கிறார்.

"நாம் மேற்கொண்டுள்ள காரியம் நியாயமானதே என்பதற்கு மேலும் வலிவு கொடுத்தாக வேண்டும். இந்தி வெறியர்களின் முக்கிய நோக்கமெல்லாம், தென்னகத்தை அடிமைப்படுத்த வேண்டும்—நிரந்தர அடிமைக் காடாக்கவேண்டும் என்பதுதான். இந்தி ஒரு வளமிக்க மொழியல்ல என்பது அவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. இந்தித் திணிப்பின் பேரால் ஒரு பெரிய சதி—சூழ்ச்சித் திட்டம் வைத்திருக்கிறார்கள்.

"இந்தித் திணிப்புக்கு அரசியல் சட்டத்தை ஆதாரம் காட்டுகிறார்கள். அரசியல் சட்டத்தை நிர்மாணித்தவர்கள் யார்? அந்தச் சட்டம் மக்களின் சம்மதம் பெற்றதா? இக்கேள்விக்கு, நாட்டிலுள்ள மக்களுக்குப் பதில் சொல்ல சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறார்கள். யாரோ சிலர்—4 பேர் கூடிக்கொண்டு, சுதந்தரம் கிடைத்துவிட்ட ஆரவாரத்துக்கிடையே—குதுகலத்தில் இந்தியைப் புகுத்த வேண்டுமென்று சட்டம் தீட்டிவைத்துவிட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்—மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்—மக்களிடம் ஓட்டுப் பெற்றுச் சென்றவர்களால் இந்தி புகுத்தப்படவில்லை.

"இந்தியில் புதிய சொற்கள் கண்டுபிடிக்க வேண்டுமென்று அதற்காக ஒரு கமிட்டி நியமித்து, பல இலட்சம் ரூபாய்கள் செலவிட்டு, 7—8 ஆண்டுகள் அது வேலை செய்தும், ஒழுங்கான— உருப்படியான காரியம் எதையும் அது செய்யவில்லை என்பதை கேர் கமிட்டியே சொல்லியிருக்கிறது.

"இந்தியைத் தாய்மொழியாகக்கொண்டு பேசப்படும் மாகாணங்களில்கூட இன்று சட்டசபை நிகழ்ச்சிகள் இந்தியில் நடைபெறவில்லை; அன்றியும், சோதனைக்காகக்கூட அங்கு சட்டம் இந்தியில் இல்லை. ஆங்கிலத்தில்தான் சட்டமெல்லாம் இயற்றுகிறார்கள். இந்தி வட்டாரத்திலுள்ள ஆக்ரா போன்ற பல்கலைக் கழகங்களிலெல்லாம்கூட ஆங்கிலத்திலேதான் பாடம் நடத்துகிறார்கள்.

"இந்தி அரசியல் மொழியாக வேண்டுமென்பதல்ல, வடநாட்டவரின் கருத்து. இங்குள்ளவர்கள் ஆங்கிலத்தை விட்டுவிட வேண்டும்—தங்களுடைய அடிமைகளாகவேண்டும் என்பதற்காகத்தான் இந்தியைப் புகுத்துகிறார்கள்.

"இந்தி என்பது சரியான மொழியா என்றால் அல்ல; அதற்கான சொற்களைக் கடன் வாங்கிக்கொள்ளவும் அரசியல் சட்டத்தில் வரம்பு வைத்திருக்கிறார்கள். அதன்படி பார்க்கப்போனாலும் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, வங்காளம், மராத்தி ஆகியவற்றிலிருந்து கடன் வாங்கி ஏதேனும் புதுப் பதங்கள் சேர்த்திருக்கிறார்களா என்றால், இல்லை. எல்லாம் சமஸ்கிருதத்திலிருந்துதான் எடுத்துச் சேர்த்திருக்கிறார்கள். சமஸ்கிருத ஆட்சியை நிலைநாட்டவே இதைச் செய்திருக்கிறார்கள். இந்தச் சூழ்ச்சி தெரிந்துதான் தி. மு. கழகம் இதை எதிர்க்க ஈடுபட்டிருக்கிறது.

"ஆச்சாரியார், இந்தியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்கிறார்; மற்றும் பலர் பிரச்சாரம் செய்கின்றனர்; அறிக்கைகள் விடுகின்றனர்; என்றாலும், இந்தியை எதிர்த்து தடியடிபட—சிறைக்குப் போக—உயிரைப் பணயம் வைத்துப் போராட நம்மால்தான் —தி. மு. கழகத்தினால்தான் முடியும்; எனவேதான் நாம், இதிலே ஈடுபட்டிருக்கிறோம்.

"'இந்தி ஒழிக' என்று நாம் சொல்லும்போது, 'அப்படிச் சொல்லக்கூடாது' என்று சிலர் கூறுகின்றனர்; நிச்சயமாக அப்படித்தான் சொல்ல வேண்டும். உலக விடுதலை வரலாறுகளைப் படித்தவர்களுக்குத்தான் இதன் சூட்சமத்தைப் புரிந்துகொள்ள முடியும். எந்த விடுதலைப் படையும் 'வாழ்க' என்று கூறியதில்லை; 'ஒழிக' என்றுதான் முழங்கியிருக்கிறது. இதன் மகத்தான சாதனையைப் பின்னாலேதான் புரிந்துகொள்ள முடியும்.

"கற்புள்ள ஒரு கன்னியிடம் ஒரு காமுகன் வம்பு செய்தான் என்றால், அவள், அவனை வாழ்த்தியா வரவேற்பாள்? ஆத்திரமுடன்தான் பாய்வாள். அதைப்போல நம் கன்னித்தமிழை அழிக்கவரும் சக்தியை சீறிப் பாய்ந்துதான் எதிர்க்க வேண்டும். மிச்ச மீதியுள்ள தமிழ் மொழியின் ஜீவ

(4-ம் பக்கம் பார்க்க)

உணவு உற்பத்தி பெருக வழி என்ன?

உற்பத்திச்செலவு குறையவேண்டும்

நிலப் பிரச்சினைக்குத் துரிதமாகப் பரிகாரம் காணவேண்டும்

தோழர் ஏ. கோவிந்தசாமி தெரிவிக்கும் யோசனைகள்

சென்னை, நவ. 7—

உணவு உற்பத்திப் பெருக்கம் பற்றி கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒன்றின்மீது தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசியதாவது :—

"இன்று நண்பர் பழனிச்சாமி அவர்கள் நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றும் மக்களுக்குத் தேவையான அளவு உணவு கிடைக்க வேண்டுமென்றும், அரசாங்கம் அதற்கான வழி வகைகளைச் செய்து, வியாபாரிகள் கொள்ளை இலாபமடிப்பதைத் தடுக்க முன்வர வேண்டுமென்றும் ஓர் தீர்மானம் கொண்டு வந்துள்ளார்; இந்தத் தீர்மானத்தை ஏழைகள் வரவேற்பார்கள்—பெரிய மிராசுகள் வரவேற்க மாட்டார்கள்!

"இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உறுப்பினர்கள் பெரிய விவசாயிகளுக்குப் பரிந்து பேசினார்கள். திரு. கரிய கௌடர் பேசும்போது, 'ஒரு படி அரிசி ரூ. 2 விலைக்கு விற்கப்பட்டது' என்று கூறினர். இருக்கலாம்; அவர் ஊரில் அப்படி இருந்திருந்தாலும் அது அநியாயம்; அதே அநியாயம் இப்போதும் இருக்கக் கூடாது என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

"இந்த உணவுப் பிரச்சினையில் அரசியல் கூடாது; மிராசு—ஏழை என்ற பிரச்சினைகள் தான் ஆராயப்பட வேண்டும்.

"உற்பத்தி அதிகம் என்று அமைச்சர் கூறினர்; எங்கே?

"பதுக்கலும் கள்ளக்கடத்தலும்தான் விலை உயர்வுக்குக் காரணம் என்றால், அந்தந்த நிலையைத் தெரிந்துகொண்டும் அரசாங்கம் ஏன் வாளாவிருக்கிறது?

"மாநில, மத்திய அமைச்சர்கள் அவ்வப்போது உணவுப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசும் பேச்சுக்களும், அறிக்கைகளும் வியாபாரிகளைப் பதுக்கலில் ஈடுபடச் செய்கிறது. இன்றுகூட மத்திய அமைச்சர் ஜெயின், 'அடுத்த ஆண்டில் உணவுத் தானியங்களின் விலை அதிகரிக்கும்' என்று கூறியுள்ளார்.

"உற்பத்தி அதிகமாக உள்ளது என்பவர்கள், அந்த அளவுக்கு மார்க்கெட்டில் உணவுப் பொருள் இல்லாத நிலைக்குக் காரணம் கண்டுபிடிக்க வேண்டும்.

"உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது; அதைக் குறைக்க வேண்டும்; குறைந்த விலையில் உரம், எண்ணெய், மின்சாரம் தரப்பட வேண்டும்; விலை உயர்வைத் தடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விழைகிறேன்.

"நியாய விலைக் கடைகள், மக்களுக்குக் குறைந்த விலையில் தேவைப்படும் உணவுப் பொருளைத் தரும் நோக்கத்துடன் திறக்கப்பட்டன; ஆனால், டெல்லி சர்க்கார் தேவையான அளவுக்கு உணவுப் பொருளைத் தர மறுத்ததின் காரணமாகப் பாதியளவு நியாயவிலைக் கடைகள் மூடப்பட்டுள்ளன; இது நியாயமா?

"நமது மாநிலத்தில் பல மாவட்டங்கள் பற்றுக்குறையாக உள்ளன; எனவே மக்களுக்கு உறுதியளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

வளவனூரில் 13 நியாய விலைக் கடைகளையும் மூடிவிட்டார்கள். அதைத் திறக்க அமைச்சர் முன் வருவார் என்று நம்புகிறேன்.

"தாழ்த்தப்பட்டவர்கள், நெசவாளர்கள், ஏழைகள் வாழும் பகுதிகளில் உணவு நெருக்கடியைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதை செய்ய மறுத்து, 'மக்கள் அதிகமாகச் சாப்பிடத்துவங்கிவிட்டார்கள்' என்று பேசுவது மக்களைக் கேலி செய்வதாகும்.

"கோதுமையை மக்கள் உபயோகிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்வது, வடநாட்டிலே உபரியாக உள்ள கோதுமையை அரிசியை மட்டுமே சாப்பிட்டுப் பழக்கப்பட்ட தென்னாட்டவர் மீது திணிக்கச் செய்யப்படும் முயற்சி என்றே கருதுகிறேன்.

"ஆரணியாறு, பிரம்பியாறு போன்ற திட்டங்களை அமுலாக்க அரசாங்கம் எல்லாத் தியாகமும் செய்யவேண்டும்.

"சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். என்னுடைய தொகுதியில் ரூ. 3,000 செலவில் ஒரு கால்வாய் வெட்டுவதற்கு இந்த அரசாங்கம் தட்டிக்கழித்துவருகிறது.

"நிலச் சீர்திருத்தம் பற்றி சட்டம் வருகிறது—வருகிறது என்று அறிவிப்பதுடன் மட்டும் இருந்து விட்டு, அதுபற்றி மேலும் செயல்படாமல் இருப்பது, மிராசுதாரர்களை உஷார்படுத்துவதாக உள்ளது

"புறம்போக்கு நிலங்கள் ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பகிர்ந்து தரப்பட வேண்டும்.

"ஆண்டவன் பெயரால், பல மடங்களின் சொத்தாக உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை நிலமில்லாத உழவர்களுக்கும், ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தர வேண்டும்; இதை ஆண்டவன் திருப்பணியாக அமைச்சர் மேற்கொள்ள வேண்டும்."

அக். 13: நாடெங்கும் கண்டன நாள்

★

தி. மு. க. பொதுச்செயலாளர் விடுத்த அறிக்கைக்கிணங்க 13—10—57-ல் நாடெங்கும் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்— பொதுக்கூட்டங்களின் விவரம் இங்கு தரப்படுகிறது :—

அரியநகர் (புதுவை) :

காலை 9-மணியளவில் கழகப் பணிமனையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் தோழர் விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் எத்மோன் போல், ப. தணிகாசலம், வ. நெடுஞ்சேரன் முதலியவர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசியபின், இந்தித் திணிப்பைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கள்ளக்குறிச்சி :

மாலை 6 மணிக்கு துருகம்ரோடிலிருந்து தோழர் மு. பாண்டியன் தலைமையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நகரின் பல முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று துருகம் ரோடு வந்தடைந்தது; அங்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஏரல் :

தி. மு. க. சார்பில், தோழர் சி. ச. பாண்டியன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இந்தி எதிர்ப்புக்கான காரணங்களை விளக்கி, தோழர்கள் கே. சுப்பையா, ஆழ்வை-பாலன், பம்பாய் தோழர் ஆரியசங்காரன், ஆ. அண்ணாமலை, இரத்தினவேல் பாண்டியன் ஆகியோர் பேசினர்.

பொன்மலை—மேலக் கற்கண்டார்கோட்டை :

பொன்மலைபட்டி தி.மு. கழகம், மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகம் சார்பில் காலை 8 மணிக்கு, ஒலி முழக்கங்களுடன் சைக்கிள் ஊர்வலம் பொன்மலைப் பட்டி, மேலக்கற்கண்டார் கோட்டை, அரியமங்கலம், அம்பிகாபுரம், பொன்மலை ஆகிய ஊர்களில் சுற்றியபின், 1மணிக்கு முடிவடைந்தது; பின்னர், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஏனங்குடி :

தி.மு. கழகச் சார்பில் தோழர் கோ. பாலசுப்பிரமணியம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர் கோ. சி. மணி அவர்கள் பேசினர்; அன்று மாலை சைக்கிள் ஊர்வலம் மாப்பிளைக்குப்பம், நன்னிலம், சன்னாவூர் வழியாக ஏனங்குடி வந்தடைந்தது; கூட்டத்தில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நந்திவரம்-கூடுவாஞ்சேரி தி. மு. க. துவக்கவிழா

அண்ணா கலந்து கொண்டார்

1—11—57-ல், நந்திவரம்—கூடுவாஞ்சேரி தி. மு. க. திறப்பு விழா தோழர் சி.எஸ். பூஞ்சோலை தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் அண்ணா அவர்களும், தோழர்கள் என். வி. நடராசன், மா. கி. தசரதன், ஜே. ஏ. வகாப், மற்றும் பல தோழர்களும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில் பல்வேறு கிளைக் கழகங்கள், அமைப்புகள் சார்பில் அண்ணாவுக்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

இறுதியில் அண்ணா அவர்களால், தோழர் எஸ். திருநாவுக்கரசு அவர்கள் மகவுக்கு 'கண்ணகி' என்றும்; தோழர் பு. ர. ராசன் அவர்களது இரு ஆண் குழவிகட்கும் 'மதியழகன்', 'அன்பழகன்' என்றும்; தோழர் ஏகாம்பரம் அவர்களின் மகவுக்கு 'செந்தாமரை' என்றும் பெயர் சூட்டப்பட்டு, தலைவர் முடிவுரைகூற கூட்டம் முடிவுற்றது.

உணவு நெருக்கடிக்கு சர்க்கார்தானே பொறுப்பாளி?

கொள்ளை இலாபமடிப்போர் மீது நடவடிக்கை ஏன் இல்லை?

சட்டமன்றத்தில் தோழர் க. அன்பழகன் விளாசல்

சென்னை, நவ. 7—

உணவு உற்பத்தி பற்றி சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்மீது தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"உணவு நெருக்கடி பற்றி ஆராய எதிர்க்கட்சி உறுப்பினர் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது பேசுகையில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், உணவு பற்றுக்குறை உள்ளது என்பதை மறுக்காமல் ஒப்புக்கொண்டனர். அந்தப் பற்றுக்குறையைப்போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்காததின் காரணமாக, இன்று பொதுமக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு அவதியுறுகின்றனர்.

"மக்களுக்கு—உணவு இல்லை என்ற பிரச்சினை! உழவர்களுக்கு—நல்ல விலை கிடைக்கவில்லையே என்ற ஏக்கம்! இதற்குக் காரணம் என்ன? ஒரு தராசின் தட்டுகளைச் சரியாகத் தூக்காவிட்டால் ஏற்றத் தாழ்வைக் காணமுடியாது.

"இன்றைய அரசாங்கம் ஒருபுறம் மிராசுதாரர்களிடம் அக்கறை காட்டிக்கொண்டும், மற்றொருபுறம் கொள்ளை இலாபமடிக்கும் வியாபாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்காமலும் இருக்கையில், நாட்டின் உணவு நிலையை ஆராய்ந்தும் பயனில்லை; உருவாகியுள்ள சூழ்நிலையையும் உணரமுடியாது.

"உற்பத்திச் செய்யப்படும் உணவை அரசாங்கம் தனது மேற்பார்வையில் அமைத்துக்கொள்ளாத காரணத்தால், வியாபாரிகள் திட்டமிட்டு, இலாப நோக்குடன் கொள்முதல் செய்ய முனைகின்றனர். அதனால் உணவுப் பற்றுக்குறையும், பதுக்கலும், விலை தடுமாற்றமும் ஏற்படுகிறது.

"உணவு மண்டலம் அமைக்கப்படுவது, வட்டார எல்லைக்குள் உணவு உதவி செய்வதற்குப் பயன்படுதல் வேண்டும்; இதற்கு மாறாக, யார் வேண்டுமானாலும் வாங்கலாம் என்று இடையூறு செய்யப் பயன்படக்கூடாது.

"அரசாங்கத்தின் அனுமதியுடன் உணவுத் தானிய நடமாட்டம் இருக்கவேண்டும். இன்றைய நிலை அரசாங்கத்தின் திறமையைக் குறைப்பதாக உள்ளது.

"கள்ளக்கடத்தலையும், விலை உயர்வையும் பதுக்கலையும் தடுப்பதற்குச் சட்டம் உள்ளது.

'அறுவடையில் 60, 70 சதவிகிதத்தை அரசாங்கத்திற்குக் கட்டாயம் தரவேண்டும் என்று ஏற்பாடு செய்யவேண்டும். கட்டாயக் கொள்முதலும் செய்யலாம். அதிக அளவு நிலமுள்ளவர்கள், பயிரிடாத நிலங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும். சர்க்கார் அந்த நிலங்களில் கூட்டுறவு முறையில் விவசாயம் நடத்த முன்வரவேண்டும்.

"பணப் பயிர்கள் அதிகமாகப் பயிரிடுவதைத் தடை செய்ய வேண்டும்; அதிக இலாபம் கிடைக்காததே, உழவர்கள் பணப் பயிர்களைப் பயிரிடுவதற்குக் காரணம்.

"ஏரிக்கரைகளைப் பலப்படுத்தியும், குளங்களைச் சீர்படுத்தியும் மழையின்போது தண்ணீரைத் தேக்கவும் வழிகாணவேண்டும்.

'சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் இலாபகரமானதல்ல என்று கைவிடப்படும் நிலைமாறி, அதிகச் செலவானாலும் அதனை நிறைவேற்றவேண்டும்.

"இயந்திர சாதன உதவியுடன் பயிரிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். மக்கள் பழைமையை நீக்கி, புதுமையை வரவேற்று, நவீன விஞ்ஞான முறைகளை மேற்கொண்டு விவசாயத்தில் ஈடுபடச் செய்யுமாறு முயலவேண்டும்."

'அரிசி விலையேற்றத்திற்குச் சமூக விரோதிகளே காரணம்'

சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் கூறுகிறார்

கேரளத்திற்கு அளவு மீறி அரிசி செல்வதாகவும் குறைப்படுகிறார்

சென்னை, நவ. 7—

"தவிர்க்க முடியாதபோதுதான் உணவுப் பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கவேண்டுமே தவிர, இப்போது அலல. இப்போது அப்படிப்பட்டதொரு சூழ்நிலை உருவாகவில்லை.

"ஆனால், அரிசியைப் பதுக்கிவைத்து கொள்ளை இலாபம் அடிப்போர்களைத் தடுப்பதற்கு, அரிசி வியாபாரம் செய்வோருக்கு 'லைசென்சு' வழங்கும் முறை பயன்படலாம் என்று கருதுகிறேன். இதர வழிமுறைகள் பற்றி உணவுப்பொருள் விலை விசாரணைக் குழுவின் அறிக்கைக்குப்பிறகு யோசிக்கலாமென்றிருக்கிறோம்" என்பதாக மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

உணவு மண்டல ஏற்பாட்டிற்குப் பிறகு விலை ஏறியிருப்பதாகக் கூறுவதை அவர் மறுத்தார்.

தமிழ்நாட்டிலிருந்து உணவுப் பொருள் வெளிமாநிலங்களுக்குச் செல்வது பற்றிக் குறிப்பிடுகையில், அமைச்சர் கடந்த மூன்றாண்டுகளுக்கான புள்ளி விவரங்களைத் தந்தார்.

சராசரியாக, மாநிலத்தில் ஒன்றரை இலட்சம் டன் அரிசி பற்றுக்குறை இருப்பதுண்டு என்றும், இது, மோசமான பருவநிலைகளினால் மூன்று அல்லது நான்கு இலட்சம் வரை ஏறுவதுண்டு என்றும் அவர் கூறினர்.

முன்பெல்லாம் ஆந்திராவிலிருந்து சுமார் 2 இலட்சம் டன் அரிசி வருவதுண்டு என்றும், ஆனல் இப்போது அப்படி இல்லை என்றும் அவர் கூறினர்.

"1954-ல் தஞ்சையிலிருந்து 1,13,000 டன் அரிசி சென்றது; ஆந்திராவிலிருந்து சென்னைக்கு வந்ததோ, 92,000 டன் மட்டும் தான்!

"1955-ல் 1,98,000 டன் அரிசி கேரளத்திற்குச் சென்றது; ஆனல் ஆந்திராவிலிருந்து வந்ததோ 34000 டன் மட்டுந்தான்!

"1956-ல் ஆந்திரத்திலிருந்து வந்தது 34,000 டன் மட்டுமே; ஆனல் இந்த ஆண்டு அக்டோபர் 30-ம் தேதி முடிய மட்டும் 1,42,900 டன் அரிசி கேரளம் சென்றுள்ளது" என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

மேலும் பேசிய அவர், மாநிலத்தில் உற்பத்தி ஓரளவு அதிகரித்திருக்கிறது என்றும் கூறிக் கொண்டார்.

"ஆனல், பஞ்ச காலத்தில், கோதுமையைச் சாப்பிட்டவர்கள் இப்போது மீண்டும் அரிசிக்கே திரும்பிவிட்டனர்; கோதுமை வேண்டாம் என்கின்றனர். நான், மக்கள் தங்களது உணவுப் பழக்கங்களைச் சற்று மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் கோதுமையைச் சாப்பிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்."

மேலும் பேசிய அமைச்சர் 'சில சமூக விரோதிகள் அரிசியைக் குவித்து வைத்துக்கொண்டு இலாப நோக்கோடு உயர்ந்த விலையில் அரிசியை விற்கின்றனர்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

டெல்லியின் சர்வாதிகாரம்!

சென்னை, நவ. 8—

"ஆட்சி மொழி பற்றியோ, சென்னை மாநிலத்தில் இந்திக்கு இடமளிக்க வேண்டிய இடம் குறித்தோ மத்திய அரசாங்கம், சென்னையுடன் கலந்து முடிவு செய்யவில்லை" என்று, நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சட்ட மன்றத்தில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

"இந்தி ஆட்சி மொழியாக்கப்படுவதை ஒத்திபோடும்படி சென்னை வற்புறுத்துமா?" என்று, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கேட்டார்.

"வற்புறுத்தியுள்ளது; அவசியமானால் மீண்டும் வற்புறுத்தும்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

"இந்திக்கு ஆட்சி மொழியாகும் தகுதிபற்றி ஆராயதென்னாட்டு தலைவர்கள்—சமூகத் தலைவர்களை கலந்து அரசாங்கம் முடிவு செய்யுமா?"

"எப்படிச் செய்வது, எப்போது செய்வது என்பது பற்றி யோசித்து வருகிறேன்; சட்ட மன்றத்திலுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து இது பற்றி முடிவு செய்வதாக உள்ளேன்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

வாய்ப்பு அளிக்கப்படுமென எதிர்பார்க்கிறார்!

சென்னை, நவ. 8—

"ஆட்சிமொழிபற்றி இன்னும் இறுதி முடிவுகள் ஏற்படவில்லை; மொழிக் குழு சிபாரிசுகளை நாம் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை; அந்தச் சிபாரிசுகளைப் பரிசீலனை செய்ய பாராளுமன்றக் குழு அமைக்கப்பட்டுள்ளது; அக்குழுவிடம் நமது கருத்துக்களையும் எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளிக்கப்படும் என்று கருதுகிறேன்" என்று அமைச்சர் சுப்பிரமணியம், கல்வி அறிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும் போது குறிப்பிட்டார்.

மணிமுத்தாறு திட்டம்

10,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதியாம்!

சென்னை, நவ. 8—

"மணிமுத்தாறு திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்தில், நாங்குனேரி தாலுகாவில் சுமார் 10,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது" என்று அமைச்சர் கக்கன், இன்று சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கம் இன்னும் ஆராய்ந்துவருகிறதாம்

சென்னை, நவ. 8—

"அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தி அமைக்க சென்னை அரசாங்கம் இன்னும் ஆராய்ந்து வருகிறது" என்று, அமைச்சர் பக்தவத்சலம் இன்று சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

சென்னைக்குப் புதிய கவர்னர்

திங்கள் இறுதியில் முடிவு

சென்னை, நவ. 7—

காலஞ்சென்ற ஏ. ஜே. ஜான் அவர்களுக்குப் பதிலாக சென்னை மாநிலத்திற்குப் புதிய கவர்னர் யார் என்பது பற்றி இத்திங்கள் இறுதியில் முடிவு செய்யப்படும் என்று தெரிய வருகிறது.

முதன் மந்திரி காமராசர் வரும் நவம்பர் 16-ந் தேதி புதுடில்லி செல்லுவார் என்றும், அப்போது மத்திய உள்நாட்டு மந்திரி காமராசருடன் இதுபற்றிக் கலந்தாலோசிப்பார் என்றும் கூறப்படுகிறது.

'இந்தி' பற்றி

கம்யூனிஸ்டு உறுப்பினர் கருத்து

சென்னை, நவ 8—

கல்வி அறிக்கை மீது சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது, கம்யூனிஸ்டுத் தலைவர் எம். கல்யாணசுந்தரம் பேசுகையில் இந்தியைப் பற்றிக் குறிப்பிட்டதாவது :—

"தமிழுக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது; ஆனால், இந்தியின் முக்கியத்துவத்தைக் குறைக்கவில்லை. இந்தி விஷயத்தில் இம் மாநில அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

"இந்தி படித்தால்தான் மாநில சர்க்காரிலோ, மத்திய சர்க்காரிலோ உத்தியோகம் கிடைக்கும் என்ற நிலை வருமானால் நான் 'இந்தி'யை எதிர்ப்பேன்.

"இந்திக்குப் பரீட்சையோ, மார்க்குகளோ வைத்துக் கட்டாயப்படுத்தக்கூடாது.

"மத்திய அரசாங்கம் இந்தி மொழி வெறி கொண்டு கார்டுகளில் இந்தியைப் புகுத்தியுள்ளது. இது ஜனநாயகத்திற்கு விரோதமானது; இந்தி மொழி வெறியை முறியடிக்கத் தமிழ் நாட்டவர் ஒன்று சேர வேண்டும்."

கஷ்டத்தைச் சமாளித்தால்தான்

நன்மை ஏற்பட முடியுமாம்!

கல்வி அமைச்சர் கூறுகிறார்

சென்னை, நவ. 8—

"மூன்று மொழிகளைக் கற்பதிலுள்ள கஷ்டம் பற்றித் தோழர் க. அன்பழகன் குறிப்பிட்டார்; நான் அதை ஒப்புக் கொள்கிறேன்.

"மூன்று மொழிகளும் வெவ்வேறு எழுத்துக்களைக் கொண்டவையாதலால், மூன்றையும் கற்பது கஷ்டம்தான்; இருந்தாலும் கஷ்டத்தைச் சமாளித்துக்கொண்டால்தான் நன்மை ஏற்பட முடியும்.

"எளிதில் எந்த மொழியையும் கற்கும் ஆற்றல் தென்னிந்தியர்களுக்கு உண்டென்பது உலகறிந்தது"

என்று, சட்டமன்றத்தில், கல்வி அமைச்சர் சுப்பிரமணியம், கல்வித் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர்களின் அவல நிலை

மேலும் நீக்குவதற்கு வழியில்லையாம்

அமைச்சர் கூறுகிறார்

சென்னை, நவ. 8—

ஆசிரியர்களின் அவல நிலையை சுட்டிக்காட்டி, அவர்களுக்குப் போதுமான ஊதிய உயர்வு தர வேண்டும் என்று கழகச் சட்ட மன்ற உறுப்பினர்கள், இன்று சட்டமன்றத்தில்வலியுறுத்தினர்.

அமைச்சர் பதிலளிக்கையில், 'நான் மட்டுமென்ன—ஆசிரியர்களுக்கு நல்ல ஊதிய உயர்வு தரப்பட்டுள்ளது என்றா கூறுகிறேன்?' என்று ஆரம்பித்து, வரவு-செலவுத் திட்டத்தில் சில புள்ளிவிவரங்களைச் சுட்டிக்காட்டி, 'இன்றைய நிலையில் இதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கு வழியில்லை' என்று கூறி முடித்தார்.

இந்தி வெறியர்களுக்கு

சி. சுப்பிரமணியம் எச்சரிக்கை!

சென்னை, நவ. 8—

"பொது மொழிப் பிரச்சினை, வெறி அடிப்படையில்—உணர்ச்சி அடிப்படையில் தீர்க்கப்படக்கூடியதல்ல; மொழி விஷயத்தில் யாரும் வெறி கொள்ளக்கூடாது. இதை இந்தி வெறியர்கள் உணர வேண்டும்"

என்று அமைச்சர் சுப்பிரமணியம் சட்டமன்றத்தில் கூறியுள்ளார்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம்

மூன்றாவது மாவட்ட மாநாடு பற்றி முடிவு

18—10—57 வெள்ளியன்று வடசேரி — நாகர்கோயில் கழகக் கட்டிடத்தில் கூடிய நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டத்தில் மாவட்ட மாநாடு குறித்து முடிவெடுக்கப்பட்டது.

நாஞ்சில் மாவட்ட 3-வது மாநாட்டை டிசம்பர் திங்கள் 27, 28 (வெள்ளி, சனி) நாட்களில் கிருஷ்ணன்கோயில்—(நாகர்கோயில்) நடத்துவதாக முடிவெடுக்கப்பட்டது.

மாவட்டச் செயலாளர் கி. மனோகரன் அவர்கள் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராவார்.

மாநாட்டுத் தலைவராக தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம்.பி. அவர்களையும், திறப்பாளராக டாக்டர் எஸ். அருணாசலம் (மதுரை) அவர்களையும் அழைப்பதென முடிவெடுக்கப்பட்டது.

தோழர்கள் பி. சாம், ஏ. இராமசாமி ஆகியோர் மாநாட்டின் செயலாளர்களாகவும், தோழர் கே. சுப்பிரமணியன் பொருளாளராகவும், தோழர்கள் எஸ். வி. அப்பன், ஜி. எம். ஷா ஆகியோர் தொண்டர் படைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரசாங்கத்தின் சுறுசுறுப்பு

சென்னை, நவ. 8—

சேலம் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 80,000 மோசடி செய்யப்பட்டதுபற்றி இன்று சட்டமன்றத்தில் கேள்விகள் எழும்பப்பட்டன.

"கடந்த மூன்றாண்டுக் காலமாக சேலம் கூட்டுறவுச் சங்கத்தின் மீது இருந்துவந்த மோசடிப் புகார்கள் பற்றித் தகவல் தருவதாக 15 திங்களுக்குமுன் அரசாங்கம் கூறியது; அது என்ன புகார் என்று கூறப்படுமா?"

என்று தோழர் எம். பி. சுப்பிரமணியம் இன்று சட்டசபையில் கேட்டார்.

"கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும், செயலாளரும் சட்டப்படி உள்ள விதிகளை அனுசரிக்கவில்லை என்று கூறப்படுகிறது; அதுபற்றி விசாரணை நடத்திவருகிறோம்; பல இடங்களிலிருந்து தகவல்கள் சேகரிக்க வேண்டியிருப்பதால் தாமதமேற்படுகிறது" என்று அமைச்சர் வெங்கட்ராமன் பதிலளித்தார்.

காரணம் கண்டுபிடிக்கிறார்!

சென்னை, நவ. 8—

"தனித் தமிழ்நாடு ஏற்பட்டாலும், பிற மாநிலங்களுடன் நாம் தொடர்புகொள்ளாமல் இருக்க முடியாது; எனவே நாம், ஒரு பொது மொழியைக் கற்கவேண்டும். கேரளம், மைசூர், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள், இந்தியைக் கற்க முனைந்துவிட்டன; எனவே நாமும், ஒரு பொது மொழியை—அது ஆங்கிலமானாலும், இந்தியானாலும், வேறு எந்த மொழியானாலும்—கற்கவேண்டும்"

என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் இன்று சட்டமன்றத்தில் கூறினார்.

'கல்வித் துறையில் தலையிடோம்'

உறுதியளிக்கிறார் கல்வியமைச்சர்

சென்னை, நவ. 8—

"பாடத் திட்டங்கள் முதலியன கல்வி நிபுணர்களிடமே ஒப்படைக்கப்படும்; அமைச்சரோ, சட்ட மன்றமோ இதில் தலையிடப்போவது கிடையாது; ஆனால், இப்போது கொண்டுவர எண்ணியுள்ள கல்விச் சட்டம், வெறும் கல்வி அமைப்புப் பற்றியேயாகும்"

என்று, கல்வி அமைச்சர் சுப்பிரமணியம், சட்டமன்றத்தில், கல்வி பற்றி அரசாங்கம் திட்டவட்டமாகச் சட்டமியற்றுவது பற்றிய கொள்கையை விளக்குகையில் குறிப்பிட்டார்.

கே. எஸ். பாண்டியன் நினைவு நாள்

அண்ணா கலந்து கொள்கிறார்

10—11—57 மாலை 6மணிக்கு சென்னை—வண்ணை (3-வது வட்டம்) தி. மு. க. கிளையின் சார்பில், இராபின்சன் பூங்கா திடலில், கே. எஸ். பாண்டியன் நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் பி. ஏ. ஆறுமுகம் தலைமை வகிப்பார். அண்ணா அவர்கள், கே. எஸ். பாண்டியன் படத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றுவார். மாணவி சற்குணம், மாணவன் சத்தியநாதன் ஆகியோரும் பேசுவர்.

பம்பையாறு அணைத் திட்டம்

முடிவான நிலைமை ஒன்றும் உருவாகவில்லையாம்

அமைச்சர் கக்கன் கூறுகிறார்

சென்னை, நவ. 7—

"பம்பையாறு அணைத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி இன்னும் சென்னை அரசாங்கம் ஆராய்ந்து கொண்டுள்ளது" என்று கேள்வி நேரத்தின்போது, சட்டமன்றத்தில் அமைச்சர் கக்கன் தெரிவித்தார்.

"பரம்பிக்குளம் தண்ணீரைக் கொண்டுவருவது பற்றி நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் முடிவு என்ன?" என்று தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேட்டார்.

"முடிவான நிலைமை ஒன்றும் உருவாகவில்லை" என்று அமைச்சர் பதிலளித்தார்.

மதியழகன் முழக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியையும் இழந்துவிட நாம் தயாராக இல்லை.

"இன்றைக்கு இங்குள்ள பலபேர் இந்தியை எதிர்ப்பதாகச் சொல்கிறார்கள். பத்திரிகைகள் எல்லாம்இந்தியை எதிர்ப்பதாகக் கூறுகின்றன. ஆனால், அக். 13-ந் தேதி நாம் நடத்திய இந்தி எதிர்ப்பு நாள் செய்திகளை எல்லாப் பத்திரிகைகளுமே இருட்டடிப்புச் செய்து விட்டன; போதிய விளம்பரம் தரவில்லை. உண்மையிலேயே இந்தியை எதிர்க்கும் நோக்கம் இந்த நாட்டுப் பத்திரிகைகளுக்கு இருந்திருக்குமானால், இப்படிச் செய்திருக்க மாட்டார்கள் எனக் கருதுகிறேன். இதை ஆச்சாரியார் போன்றவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

கழகக் கூட்டங்கள்

★

ஆத்தூராம்பாளையம் :
(திருச்செங்கோடு வட்டம்)
மாரியம்மன் கோவில் திடலில்
தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
10—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : மா. பொன்னுசாமி
பேசுவோர் :
ப. இராமலிங்கம்
இரா. தாண்டவன்
தி. ப. நடேசன்

★

ஓசூர் :
நியூடவுன் கூட்டுறவு
காலனி திடலில்
தி. மு. க. துவக்க விழா
11—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : இரா. சேகநாதன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
பி. எம். கருணாகரன்

★

மோகனூர் :
(கள்ளக்குறிச்சி வட்டம்)
தி. மு. க. முதலாண்டு விழா
11—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : மு. அந்தாளம்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
சி. நடராசன் எம்.எல்.ஏ.
எம். ஆனந்தன் எம்.எல்.ஏ.
மாலை 4 மணிக்கு தி. மு. க. அலுவலகத்தை தோழர் சி. பி. சிற்றரசு திறந்துவைப்பார்.

★

விருகாவூர் :
கே. வி. கே. சாமி திடலில்
12—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : மு. வேங்கடாசலம்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
சி. நடராசன் எம்.எல்.ஏ.
எம். ஆனந்தன் எம்.எல்.ஏ.
மு. பாண்டியன்
மா. தங்கவேலன்

★

சென்னப்பநாய்க்கன்பாளையம் ;
(தெ. ஆ. மாவட்டம்)
சொக்கநாதர் தோப்பில்
12—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : வை. சிவப்பிரகாசம்
பேசுவோர் :
என். சீவரத்தினம்
சே. முசா

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

நவம்பர்

9 : விருஞ்சிபுரம், வாணியம்பாடி
10 : பெங்களூர்
11 : ஓசூர்
12 : காவேரிப்பட்டனம்

வ. உ. சிதம்பரனார் நினைவு நாள்

12—11—57 மாலை 4 மணிக்கு குறிஞ்சிப்பாடி ச. கு. வேலாயுதம் உயர்நிலைப் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் வ. உ. சிதம்பரனார் நினைவு நாள் திரு. பூ. கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெறும். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

சென்னை — கோடம்பாக்கம் (35-வது வட்டம்) தி. மு. க. கிளையின் பணிமனையில் 10-11-57 காலை 9 மணியளவில் தோழர் இ. வடிவேலன் தலைமையில், 'தமிழ் இலக்கியம்' என்ற தலைப்பில் தோழர்கள் மா. செங்குட்டுவன், சா. வில்லவன், கிருட்டிணமூர்த்தி, வி. பி. தரணி, மற்றும் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.